சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>பு.சா.1 மோகன் த /பெ கணேசன் , வயது 44 .</u>
**<u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை .–</u>**

1. ஆஜர் எதிரி கடையில் நான் வாடகைக்கு இருந்த விதத்தில் அவர் எனக்கு பழக்கம். எந்த ஆண்டு எதிரியின் கடையில் நான் வாடகைக்கு இருந்தேன் என்றால் எனக்கு குறிப்பிட்ட ஞாபகம் இல்லை. ஆனால் சுமார் எட்டு வருடங்கள் அவர் கடையில் வாடகை இருந்தேன். அந்த எட்டு வருட பழக்கத்தின் பேரில்தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். 19.08.2022 அன்று எதிரி என்னிடம் பணம் பெற்று சென்றார். பணம் பெற்ற ஆன்றே 19.09.2022 தேதியிட்ட காசோலையை எதிரி என்னிடம் பின்தேதியிட்டு கொடுத்தார். எதிரியின் கடையில் நான் வாடகைக்கு இருந்த போது முன்பணம் செலுத்தி இருந்தேன் என்றால் சரிதான். வருடா வருடம் முன்பணம் ஆதிகம் என்றால் சரிதான். ஆனால் முன் பணத்தை அவர் திருப்பிக் கொடுத்து விட்டார். நான் 2022–ம் வருடம் எதிரியின் கடையில் இருந்து காலி செய்தேனா என்றால் இல்லை. அதற்கு முன்பே காலி செய்து விட்டேன். ஆனால் ஆண்டு ஞாபகம் இல்லை எதிரியின் கடையில் இருந்த நான் காலி செய்த போது எதிரி எனக்கு பாண்டு எழுதி கொடுத்தார். அந்த ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தேடிப் பார்த்துதான் சொல்ல இயலும்.

2. எதிரியின் மனைவிதான் நான் வாடகை இருந்த கட்டிடத்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.இருவரும் நிர்வாகம் செய்து வந்தார்கள்.எதிரி அரசாங்க பணி செய்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். நான் எதிரியின் கடையில் வாடகைக்கு இருந்த போது அவரது வீட்டிற்கு சுமூகமாக சென்று வருவேன் என்றால் சரியல்ல. எதிரியின் கடைய நான் காலி செய்த போது எவ்வளவு பணம் திருப்பி கொடுத்தார் என்றால் பணம் ஏதும் கொடுக்கவில்லை. நான் கடையை காலி செய்து ஆறு மாதம் கழித்து தான் பணத்தை கொடுத்தார். அவர் பணத்தை கொடுத்தவுடன் நான் ஒப்பந்தத்தை அவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன். பணம் கொடுத்ததற்கு ஆதாரமாக எதிரி காசோலை எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் கடையை

காலி செய்து ஒரு வருடம் கழித்து எதிரி என்னிடம் பணம் கேட்டார். நான் திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எதிரி சென்னையில் வசித்து வருகிறார் என்றால் சரிதான், நான் கடையை காலி செய்து ஒரு ஆண்டு கழித்து எதிரி என்னிடம் பணம் கேட்டாரா என்றால் இல்லை. நான் கடையில் வேலை செய்து ஆறு மாதம் கழித்து எதிரி முன்பணத்தை எனக்கு கொடுத்த பின்பு சுமார் ஒரு வருடம் கழித்து என்னிடம் பணம் கேட்டார். எதிரி பணம் கேட்ட தேதி எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. 19.08.2022 அன்று எதிரிக்கு பணம் கொடுத்தேன்.

3. நான் எனது வீட்டில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்த போது யாரேனும் நேரடி சாட்சிகள் இருந்தார்களா என்றால் என் மனைவி இருந்தார். மூன்றாம் நபர்கள் யாரேனும் சாட்சியாக இருந்தார்களா என்றால் இல்லை. எதிரி எனக்கு நன்கு அறிமுகம் என்பதால் மூன்றாம் நபர்களை வைத்து நான் பணம் கொடுக்கவில்லை. நான் எதிரியின் கடையில் வாடகைக்கு இருந்த சமயத்தில் நானும் எதிரியும் குடும்ப நண்பர்களாக இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. பொதுவாக எதிரி தனது வீட்டில் கையொப்பமிட்ட காசோலைகளை வைத்து வருவது அவரது பழக்கம் என்றால் எனக்கு தெரியாது. நானும் எதிரியும் குடும்ப நண்பர்களாக பழகி வந்த காரணத்தால் நான் அவர் வீட்டிற்கு சுமூகமாக சென்ற சமயத்தில் எதிரியின் வீட்டிலிருந்து இவ்வழக்கு காசோலை நான் எடுத்து வந்து விட்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலை நான் பூர்த்தி செய்தேனா என்றால் சரிதான் ஆனால் தேதியை எதிரி பூர்த்தி செய்து கொடுத்தார் நான் என் பெயரை மட்டும் பூர்த்தி செய்து கொண்டேன். காசோலையில் உள்ள பணத்தொகையை நான் பூர்த்தி செய்தேனா என்றால் இல்லை. எதிரி பூர்த்தி செய்து கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ 1 கையொப்பமிட்ட மையும் பூர்த்தி செய்யப்பட்ட மையும் வேறுவேறாக உள்ளது என்றால் சரியல்ல.

4. எதிரி அரசாங்க பணியிலிருந்து ஓய்வு பெற்ற நபர் என்றாலும் அவரது மனைவி கடைகளை வாடகைக்கு விட்டு நல்ல வருமானம் ஈட்டுகிறார் என்றாலும், எனவே எதிரி என்னிடம் பணம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் கடையை காலி செய்தபோது முன்பணமாக நான் செலுத்தி இருந்த ரூபாய் 7,லட்சத்தில் 4 லட்சம் மட்டுமே கொடுக்க முடிந்ததாலும் மீதமுள்ள ரூபாய் 3 லட்சத்தை திருப்பி கொடுக்க வேண்டிய அவசியம் இருந்ததாலும் என்னிடம் காட்டப்படும் 30.01.2020 தேதியிட்ட ஆவணம் ஒன்றை நானும் எதிரியும் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால்

சரிதான். ( **அந்த ஆவணம் என்னால் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஆனால் அந்த மீதமுள்ள மூன்று லட்சத்தை எதிரி எனக்கு திரும்ப கொடுத்துவிட்டார். ரூபாய் மூன்று லட்சத்தை எப்போது எதிரி என்னிடம் கொடுத்தார் என்றால் அந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து ஆறு மாதத்திற்குள் திரும்ப கொடுத்து விட்டார். எனக்கு எதிரி எனக்கு ரூபாய் மூன்று லட்சம் முன்பணம் திருப்பி கொடுக்க வேண்டிய கொடுக்க வேண்டியது இருந்ததாலும் அதற்கு ஆதாரமாக இவ்வழக்கு காசோலை கொடுத்தார் என்றாலும் எனவே வட்டியுடன் சேர்த்து நான் 5 லட்சமாக பூர்த்தி செய்து இவ்வழக்கு காசோலை வங்கியில் செலுத்தி இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.